

விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றியச் செயலாளர் பழனி ஏற்பாட்டில் தென்களவாய் ஊராட்சியில் நடைபெற்ற கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றி 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்டப் பொருளாளர் ரமணன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றியப் பெருந்தலைவர் தயாளன், மரக்காணம் மத்திய ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், தூய்மை பாரத இயக்கம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 16 ஊராட்சிகளில் தூய்மைப் பணிகளை மேம்படுத்தும் வகையில் ரூ.1.54 கோடி மதிப்பில் 61 மின்கலன் வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தூய்மைப் பணியாளர்களின் பயன்பாட்டிற்கு வழங்கி துவக்கி வைத்தார். உடன் அருப்புக்கோட்டை நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, சுப்பாராஜ், சாகுல் ஹமீது, ஏ.கே.மணி, பாலகணேஷன், பொன்ராஜ், அழகு ராமானுஜம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை – போளூர் – துளுவ புஷ்பகிரியில்

# அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்தும்!

## சட்டப்பேரவையில் கவனஈர்ப்பில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

**சென்னை, ஏப். 29 -**

**சட்டப்பேரவையில் உறுப்பினர் கொண்டு வந்த கவன ஈர்ப்பில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளிக்கையில் அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசுப் பள்ளியாக ஈர்த்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.**

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஊராட்சி ஒன்றியம், துளுவ புஷ்பகிரி கிராமம், அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்த வேண்டியது குறித்து கவனஈர்ப்பு கொண்டு வந்து பேசினார்.

இந்த கவனஈர்ப்பில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கமளித்து பேசியதாவது:-



முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய இந்தக் கோரிக்கை குறித்து almost இதன் விவரங்களை பற்றியெல்லாம் தெரிவித்துவிட்டார்கள். எனவே, அதனை நான் repeat செய்யாமல், என்ன நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம் என்பதை மட்டும் சொல்கிறேன். ஏனென்றால், அரசாணை எண் 2010ஐப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்; அரசாணை எண் 85ஐப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதனால் என்னென்ன விதிமுறைகள், 40 வருடங்களாக அந்தப் பள்ளி எப்படி செயல்பட்டது என்பதைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள்.

எனவே, அதனை மீண்டும் நான் repeat செய்யாமல், இப்பள்ளி கடந்த 40 ஆண்டுகளாக நிர்வாகி இல்லாத நிலையிலும், இப்பள்ளிக்கு எந்தவிதமான கூடுதல் வசதிகளும் நிர்வாகத்தால் ஏற்படுத்தப்படாத நிலையிலும், நேரடி மானியத்தில் செயல்பட்டு வருவதை கருத்தில் கொண்டு, அரசாணை எண் 2010 மற்றும் அரசாணை எண் 85, பள்ளிக் கல்வித் துறை நாள் 15.4.2008ன்படியும் தகுந்த கருத்துருக்கள் பெறப்பட்டு, சிறப்பு நிகழ்வாக கருதி, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், துளுவ புஷ்பகிரி கிராமத்திலுள்ள அரசு நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியானது, அரசுப் பள்ளியாக ஈர்த்துக்கொள்ளப்படும் என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டடங்கள் கட்டித் தருவது பற்றி கேட்டிருக்கிறீர்கள். இந்த ஆண்டும் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் ரூ.1,000 கோடி அதற்காக தனியாக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதில் கண்டிப்பாக நீங்கள் சொல்கின்ற அந்தப் பள்ளிக் கூடத்திற்கான கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளித்தார்.

### ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 496 பயனாளிகளுக்கு ரூ.15.13 கோடி மதிப்பீட்டில்

# கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கு பணி ஆணைகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திண்டிவனம், ஏப். 26 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உழைப்பால் இந்தியாவில் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முதலிடம் பெற்று வருவதாக மரக்காணம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 496 பயனாளிகளுக்கு ரூ.15.13 கோடி மதிப்பீட்டில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கு பணி ஆணைகளை வழங்கி செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மரக்காணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்குபணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமையில் ஒன்றிய துணை சேர்மன் பழனி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 350 பயனாளிகளுக்கு12 கோடியே 44 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கானபணி ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்,

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆட்சியில் தமிழ்நாட்டில் கூரை வீடுகள் இல்லாத வகையில் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு உத்தரவிட்டார்.

அவர் வழியில் ஆட்சி செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன்னுடைய உழைப்பால் இந்தியாவில் அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு முதலிடம் பெற்று வருவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்டப் பொருளாளர் ரமணன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றியச் செயலாளர் ரவிசந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒலக்கூர் ஒன்றியம். இதேபோல் விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டம்மற்றும்பிரதான் மந்திரி ஜன்மன் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம் தலைமை தாங்கினார்.

துணைச் சேர்மன் ராஜாராமன் முன்னிலை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணகுமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்குகலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 35லட்சத்தி 56 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும்,பிரதான் மந்திரி ஜன்மம் திட்டத்தின் கீழ் 46 பழங்குடியின மக்களுக்கு ரூ 2.34 கோடிமதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில், கோவிந்தசாமி, வாசுதேவ் முருகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மக்கள் விரும்பும் கழக ஆட்சி புதுச்சேரி மாநிலத்தில் அமையும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா உறுதி!

புதுவை, ஏப். 29 -

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளையொட்டி புதுச்சேரி மாநிலம் முழுவதும் கழகத்தினர் ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இரத்ததான முகாம் உள்ளிட்ட மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி மாநில கழகம் மற்றும் கழக மருத்துவ அணி சார்பில், மாநில மருத்துவர் அணி அமைப்பாளர் ஆனந்த் ஆரோக்கியராஜ் ஏற்பாட்டில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் உருளையன்பேட்டை தொகுதிகுட்பட்ட காந்தி வீதி, கண்ணையா பிசினஸ் சென்டர் வளாகத்தில் நடைபெற்றது. மருத்துவ முகாமில் உருளையன்பேட்டை தொகுதி கழக;r செயலாளர் இரா. சக்திவேல் வரவேற்புரை ஆற்றினார்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கோபால் முன்னிலையில் நடைபெற்ற மருத்துவ முகாமினை, மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இந்த முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய் தொடர்பான பரிசோதனைகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகள் மற்றும் மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

முகாமை தொடங்கி வைத்து பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள், இத்தகைய மக்கள் நலப் பணிகள் மூலம், திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து பொதுமக்களின் நலனுக்காக உழைத்து வருகிறது. புதுச்சேரியில் பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சைகள் கிடைப்பதில்லை. கலைஞரின் காப்பீட்டுத்திட்டம் போல புதுச்சேரியில் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. பிரதமர் மோடி கொண்டு வந்த ஆயுஷ்மான் காப்பீட்டுத்திட்டத்தால் புதுச்சேரியில் யாரும் பயன்பெறவில்லை. காப்பீட்டு



திட்டத்தில் பயனாளிகளுக்கு கிடைக்கப்பெறும் தொகை அதிகப்படுத்திய போதும், அதனால் எந்த ஆதாயமும் பயனும் மக்களுக்கு இல்லை. ஆனால், திராவிட மாடல் ஆட்சிபுரியும் தமிழ்நாட்டில் தளபதியாரின் வழிகாட்டுதலில் புதுச்சேரி மக்களுக்கு ஆதரவு கரம் நீட்டிய தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நம் மக்களுக்கு இங்கு கிடைக்காத அல்லது மறுக்கப்படும் சிகிச்சைகளுக்கு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிறப்பான நவீன மருத்துவ சிகிச்சையளிக்க முன்வருவதாக உறுதியளித்துள்ளார் என்று குறிப்பிட்டு பேசிய அவர், புதுச்சேரியில் மக்கள் விரும்பும் கழக ஆட்சி உதிக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

மருத்துவ முகாமில் அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில கழக துணை அமைப்பாளர் அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., மாநில கழக பொருளாளர் ஆர். செந்தில்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூர்த்தி, நந்தா சரவணன், துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜே.வி.எஸ் சரவணா, சக்திவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, பிரபாகரன், செந்தில், அமுதாகுமார், தொகுதி செயலாளர்கள் சீதாராமன், நடராஜன், வடிவேலு, சிவக்குமார், ராஜாராம், ராஜா, ஆறுமுகம், சவுரி, இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன் தாஸ், சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் ஹாலித், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சுமதி, மாணவர் அணி அமைப்பாளர் மணிமாறன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், விளையாட்டு மேம்பாட்டு அணி ரவிச்சந்திரன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நித்திஷ், முகிலன், கிருபா, தாமரை கண்ணன், ரெமி மற்றும் உருளையின்பேட்டை கழக நிர்வாகிகள் சசிகுமார், மாறன், கிரி, மதிமாறன், கண்ணதாசன், புருஷோத், ஸ்ரீதர், தமிழ்மணி, தேவேந்திரன், ராமு மற்றும் கலிமுல்லா உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### ரிஷிவந்தியம் தொகுதியில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தில்

# ரூ.3.85 கோடியில் வீடு கட்ட பணி ஆணைகள்!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார்!

ரிஷிவந்தியம், ஏப். 29 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கலைஞரின் கனவு இல்ல பணி ஆணை வழங்கும் விழா வாணாபுரம், பகண்டை கூட்டுச் சாலையில் உள்ள ரிஷிவந்தியம் சட்டமன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ கலந்து கொண்டு பயனாளிக்கு தலா ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் 7 ஊராட்சிகளில் உள்ள 110 பயனாளிகளுக்கு ரூ.3.85 கோடி மதிப்பிலான கலைஞர் கனவு இல்லம் கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் 41 ஊராட்சிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 19 ஊராட்சிகளுக்கும் அடுத்த வாரம் அவர்களுக்கும் பணி ஆணை வழங்கப் பட உள்ளது,கடந்தாண்டு சேர்த்து சராசரியாக ஒரு ஊராட்சிக்கு 30 வீடுகள் கொடுக்கப் பட்டுள்ளது.

இது வரலாற்றில் மிகப் பெரிய சாதனை தான். எதிர்க்கட்சியினர் கடந்த பத்தாண்டு காலத்தில் பசுமை வீடுகள் என்ற பெயரில் கொடுத்திருக்கிறீர்கள். அதனுடைய எண்ணிக்கையும் நாங்கள் ஒரு வருடத்தில் கொடுத்திருக்கும் எண்ணிக்கையையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும் மதிப்பீடு போடுங்கள், ஒவ்வொரு ஊராட்சியிலும் திட்ட பணிகளை

பேனர்கள் வையுங்கள் தி.மு.க. ஆட்சியில் தான் இவ்வளவு திட்டங்கள் என பெருமிதம் கொள்கிற அளவுக்கு பணிகள் நடைபெற்றுள்ளது என்றார்.

இதில், ரிஷிவந்தியம் ஒன்றிய செயலாளர்கள் பெருமாள், துரைமுருகன், பாரதிதாசன், ரிஷிவந்தியம் ஒன்றியக் குழு தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், ஒன்றியக் குழு துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கோவிந்தராஜன், அமிர்தம் ராஜேந்திரன், ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ராஜு, ராஜீவ்காந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் துரைமுருகன், ஜெகந்நாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதவர் நல சங்கம் ஆண்டு விழா ராஜலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாவட்டத் தலைவர் யாசின் தலைமை வகித்தார். செயலாளர் மணிவாசகி முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு (நலத்திட்ட உதவிகள்) தையல் இயந்திரங்களை வழங்கினார்.



வேலூர் மாவட்டம், காட்பாடி மண்டல அலுவலகம் அருகில் பொதுமக்கள் தாகம் தீர்க்கும் வகையில் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார் ஏற்பாடு செய்திருந்த தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, இளநீர், மோர், தர்பூசணி பழங்களை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.சி.சுரேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.